20/10/1951 M.V.M
M BANGLORE, 2

போர்வாள்

வாள் 5 வீச்சு 7

20-10-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

பெருமைப் படுகிறாராம் பேரறிவாளர்!

"சென்ற நான்காண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் நாங்கள் சாதித்துள்ள செயல்களைக் குறித்து நான் சிறிதும் வெட்கப்படுகின்றேனில்லை. மாறாக அந்தச் செயல்களைச் செய்து முடித்ததைப்பற்றி நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்."

புதுடில்லிப் பொதுக் கூட்டம் ஒன்றில் பண்டித நேரு இது போலப் பேசியிருக்கிறார்.

பெருமைப்படுகிறாராம் அப் "பேரறிவாளர்!"

எதை எண்ணிப் பெருமைப் படுகிறாரோ பண்டித நேரு— நமக்குத் தெரியவில்லை!

பசி பசி என்று பரிதாபக் குரல் எழுப்பிய வண்ணம் பட்டினிப் பட்டாளங்கள் பல நாடெங்கும் பவனி வந்த படி இருக்கின்றனவே—அதை எண்ணியா?

அல்லது, "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்— வெறும் சோற்றுக்கோ வந்தது இந்தப் பஞ்சம்?" என்று வேதனைக் கீதம் பாடி, இரத்தக் கண்ணீர் வடித்து, சோக பிம்பங்களாக உலவுகிறார்களே சொர்ண பூமி என்று பாராட்டப்பட்ட இந்த நாட்டைச் சேர்ந்த மக்கள்—அதை எண்ணியா?

அல்லது, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் வளர்ந்து ஓங்கி தழைத்து நிற்கிறதே கள்ளமார்க்கெட்— அதை எண்ணியா?

அல்லது, மந்திரிப் பீடங்கள் —ஆட்சியாளர் அலுவலகங்கள் —வாணிப நிலையங்கள் — பல்வேறு பொதுநல அமைப்புகள் ஆகிய எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறதே இலஞ்சமெனும் பெருங் கொடுமை — அந்தப் பூணாரம் பூண்ட புதுமையை எண்ணியா?

அல்லது, ஆயிரக்கணக்கான மக்கள், அகில இந்தியா எங்கணும், விசாரணையே இல்லாமல் வீணாகக் கடுங்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்களே — அந்த அற்புதமான சாதனையை எண்ணியா?

அல்லது, சேலம் சிறையில், இருபத்திரண்டு இளங்காளைகளை, அன்றலர்ந்த ரோஜாக்கள் போன்ற இலட்சிய வீரர்களை, பொதுவுடைமைப் பணிபுரிந்து வந்த பொன்னான தோழர்களை, வெறிநாய்களைப் போலச் சுட்டுத் தள்ளினார்களே இந்த ஆட்சியாளர்கள்—அந்த அநாகரிகக் கொடுஞ் செயலை எண்ணியா?

எதை எண்ணிப் பெருமைப் படுகிறார் பெருந்தலைவரான நேரு?

சீன நாட்டுக்குச் செல்ல விரும்பிய செந்தமிழர் தோழர் சக்கரை செட்டியாருக்குத் தடை விதித்தார்களே அதை எண்ணியா? அல்லது ஈழநாட்டுக்குப் போக விழைந்த நண்பர்கள் மதியழகன்—நடராசனுக்கு விதித்தார்களே விசித்திரத் தடை, அதை எண்ணியா? அல்லது நூற்றுக்கணக்கான ஊர்களில் பொதுக் கூட்டங்கள் கூட்டுவோருக்கு வரிசை வரிசையாக விதித்தார்களே 144— அதை எண்ணியா? அல்லது எண்ணற்ற பத்திரிகைகள்மீது "எடு ரூபா 2000" என்றும், "கொண்டுவா ரூபா 10,000" என்றும் ஜாமீன் பாணங்களைத் தொடுத்துக் கருத்துரிமையைப் பறித்தார்களே அந்தப் பெரிய பயணத்தை எண்ணியா?

எதை எண்ணிப் பூரிப்படைகிறார் இந்தியப் பிரதமர் நேரு?

பத்தாண்டுக் காலத்திற்குத் தொழில்களைத் தேசியமயமாக்குவதில்லை என்று அறிவித்து விட்டு, டாடா—பிர்லா—டால்

(18-ம் பக்கம் பார்க்க)

இல்லாத ஜென்மம்! வேண்டாத அச்சம்!

தலைவிதி என்கிற தவறான தத்துவம்!

வீணர்கள் உரையால் வீழ்ந்தது நாடு

இந்துச் சட்ட மசோதா நிறைவேறாத காரணம்!!

★

"நேற்றுதான் கேள்விப்பட்டேன்—பரீட்சையில் தவறிவிட்டாயாமே—மெய்தானா இராமலிங்கம்?"

"ஆமாம் அநந்தராமா! உண்மைதான்! பரீட்சைதவறித்தான் போய்விட்டது!"

"இதென்னப்பா அக்கிரமமாயிருக்கிறது! நீயா தவறிவிட்டாய்! நம்பவே முடியவில்லையே!"

"நம்பமுடியாதுதான். படிப்பிலே கெட்டிக்காரன் என்று எல்லோராலும் புகழப் பட்டு வந்தவனே தவறுவது என்றால் யாரும் நம்பத்தான் மாட்டார்கள். ஆனால் என்ன செய்வது அநந்தராமா? இந்தப் பரீட்சையில் நான் தவறித்தான் போக வேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறபோது, அந்தத் தலையெழுத்தை டார்தானாகட்டும், எப்படியப்பா மாற்ற முடியும்?"

* * *

"செட்டியார்! செட்டியார்!"

"ஓஹோ! முதலியாரா! வாங்க வாங்க! எங்கே இவ்வளவு தூரம்.......இவ்வளவு காலையிலே,,,,"

"எங்கேயா? எல்லாம் தங்களைப் பார்க்கத்தான்! ஏன், தங்களைப் பார்க்க வரப்படாதோ? ......அடடே, என்னங்க இது! தங்கள் முகமெல்லாம் ஒரே துக்கம்! ஏன், என்ன நடந்தது?"

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கிளப்பறீங்க முதலியார்வாள்! என் வியாபாரம்மே போய்விட்டது! திடீரென்று, நேற்றைய தினம், வியாபாரத்தில், ரூபா எழுபதாயிரம் நஷ்டம் விழுந்து விட்டது! அதனால்தான் இப்படி தலைமேலே கையை வைத்துக் கொண்டு நடுத்தெருவில் நிக்கறேன் நான்!"

"ஐயையோ! அட பாவமே! எனக்குத் தெரியவே தெரியாதே! பத்தரை மாத்துத் தங்கமாச்சே நீர்! உமக்கா இப்படிப் பட்ட இடி விழணும்?"

"இடியென்றால் இலேசான இடியா? என் குடும்பமே பாழாகிவிட்டதே இதனால்!"

"ஐயோ பாவம்! உம்ம விதி இப்படியிருக்கிறது! என்ன செய்வது? விதி, யாரை விட்டது! விதிப் பயனை அனுபவித்துத்தான் தீர்க்கவேணும்!...... செட்டியார், நான் வரட்டுமா?"

"ஆஹா போய்ட்டு வாங்க! நீங்க என்ன செய்வீங்க! என் விதியை நான் அனுபவிக்கிறேன்! என் தலையெழுத்து! என் தலையெழுத்து!"

* * *

"அடி பாவிப் பொண்ணே! சுந்தரா! உன் தலையெழுத்து இப்படியாடி இருக்கணும்? கட்டிய மூணும் மாதத்துக்கெல்லாம் தாலியை அறுத்துப் போட்டுவந்து நிக்கிறியே! இனி என்னடி செய்யப்போறே நீ?"

"என்ன செய்யப் போறேன்! தெய்வமேன்னு தலையெழுத்தைத அனுபவிக்கப் போறேன்! வேற என்ன செய்வேனடி நான், வேற என்ன செய்ய முடியும்? கட்டிய மூணும் மாதமே அவர் என்னைத் தவிக்க விட்டுட்டுப் போய்ட்டா நான் என்னடி செய்யமுடியும்?"

"ஐயோ பாவம்! நல்ல பொண்ணு நீ! உன் எழுத்து இப்படியா இருக்கணும்!"

* * *

"கோபாலா, உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன்! கோபித்துக் கொள்ளமாட்டாயே?"

"ஒன்றல்ல நண்பா, ஓராயிரம் கேள்விகளை வேண்டுமானாலும் கேள்! பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்!"

"ஓராயிரம் அல்ல, ஒரே ஒரு கேள்வி தான் கேட்கப் போகிறேன். அதற்கு மட்டும் நீ பதில் சொன்னால் போதும். காலையிலே கோழி கூவுகிறபோது எழுந்து, இரவு, கோட்டான் கூவுகிறவரை நீ ஓயாது உழைக்கிறாய்—இல்லையா?"

"ஆமாம்!"

"அதோ, அழகான ரோல்ஸ் ராய்ஸ் காரிலே, அருமையான 'பாம்—பீச்' சூட் அணிந்து கொண்டு, ஆனந்தமாகப் போகிறானே அற்புதலால் சேட்—அவன், பிறந்த நாள் முதல் இன்றையவரை, ஒரு நாளாவது உழைத்ததே கிடையாது—இல்லையா?"

"ஆமாம்!"

"ஓயாமல் உழைக்கிற நீ ஓட்டாண்டியாக இருக்கிறாய்! உழைப்பையே அறியாத அந்த உன்மத்தன் உல்லாச புருஷனாக வாழ்கிறான்! ஏன் இந்த மாறுபாடு? தெரியுமா உனக்கு?"

"தெரியாமல் என்ன? அவன் புண்ணியவான்! அனுபவிக்கிறான்! நான் மகாபாவி! கஷ்டப்படுகிறேன்! அவன் விதி அப்படியிருக்கிறது! என் விதி இப்படியிருக்கிறது! அதது வந்த வழியை, அதது அனுபவித்துத்தானே ஆகணும்? அவனைப் பார்த்து நான் பொறாமைப் பட்டா முடியுமா?"

* * *

"அப்பா!"

"ஏன் குழந்தை?"

"இண்ணிக்கி..."

"இன்றைக்கு.........என்ன கண்ணு?"

"பள்ளிக்கூடத்திலே பார்த்தாமன் என்னைக் கேலி செய்தாம்பா!"

"என்னடா சொன்னான் அவன்?"

'போடா பறப் பயலேன்னு சொன்னாம்பா! பசங்கள்ளாம் கொல்லுனு சிரிச்சாங்கப்பா! ஏம்பா, அந்தப் பய பிராமணனா பிறக்கச்சே, நான் மட்டும் ஏன்ப்பா பறப் பயலா பிறக்கணும்?"

"அதெல்லாம் நம்ம தலைவிதிடா தங்கப்பா—போடா போ—போய், பாடத்தைப் படி—இனிமே இப்படியெல்லாம் கேக்காதே—தெரிஞ்சுதா?"

* * *

எங்கே நடைபெற்றன இந்த உரையாடல்கள் என்று அவசர அவசரமாகக் கேட்கக் கூடும் அன்புள்ள பல வாசகர்கள்!

எங்கே யென்று குறிப்பிட்டுச் சொல்லுவது? எல்லா இடங்களிலும்தான் நடைபெறுகின்றன இந்த உரையாடல்கள்! இந்தியா என்கிற பெயரால் எந்தெந்த இடங்கள் குறிக்கப்படுகின்றனவோ, இந்துக்கள் என்னும் பெயர் படைத்தவர்கள் எங்கெங்கே தங்கி வாழ்கின்றார்களோ, இந்துமதம் என்னும் வைதீக வாடை எங்கெங்கே சுழன்று வீசுகிறதோ, இதிகாசமும் புராணமும் சாஸ்திரமும் வேதமும் எங்கெங்கே தங்கள் ஆதிக்க வலையை அகலமான அளவுக்கு விரித்திருக்கின்றதோ, அங்கெல்லாம் இந்த உரையாடல்கள் நித்த நித்தம் நிகழ்ந்தபடிதான் இருக்கின்றன.

ஆண்களானாலும் பெண்களானாலும், இளைஞர்களானாலும் முதியவர்களானாலும், மாணவர்களானாலும் மாவீரர்களானாலும், டாக்டர்களானாலும் வக்கீல்களானாலும், 'இந்துக்கள்' என்னும் பட்டியலிலே தங்கள் பெயர்களைப் பொறித்துக் கொண்டவர்கள் அத்தனை பேருமே, தலைவிதி என்கிற இருட்டுச் சிறையிலே, தாமாகவே சிக்கிக்கொண்டு, தங்கள் வாழ்க்கையைச் சிதையவைத்துக் கொள்கிற சிறுமதி படைத்தவர்களாகத்தான் காணப்படுகிறார்கள்.

இராமலிங்கம், பத்தாம் வகுப்பிலே படிக்கும் மாணவன். ஒன்பதாம் வகுப்புவரையிலே ஓயாமல் படித்து ஓராண்டும் தவறாமல் ஒழுங்காகத் தேறிவந்தான். ஆனால் பத்தாம் வகுப்பு மாறியதும் அவன் படிப்பிலே கவனத்தைச் செலுத்தவில்லை. காரணம், "நாம்தான் படிப்பிலே புலியாயிற்றே! நாம் படித்தாலென்ன, படிக்காவிட்டால்தானென்ன, மேல் வகுப்பு மாறுமலா போய்விடுவோம்" என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் தலைதூக்கியதுதான். அந்த எண்ணம் அவன் உள்ளத்தில் நடமாடியதன் விளைவாக அந்த ஆண்டின் இறுதியில் நடத்தப்பட்ட பரீட்சையில் அவன் மேல் வகுப்பு மாறவில்லை. மேல்வகுப்பு மாறாததற்குக் காரணம் தன் உள்ளத்தில் பவனி வந்த இறுமாப்புணர்ச்சி என்பதை அறிந்தானில்லை இராமலிங்கம். தன் தலைவிதிதான் காரணம் தான் பரீட்சையில் தவறியதற்கு என்று திடமாக நம்பினான், நம்பியதைத் தன் நண்பன் அனந்தராமனிடமும் கூறினான். அறியாமையும், மூடநம்பிக்கையும் அந்த அளவுக்கு அவன் உள்ளத்தை ஆட்டிப் படைத்திருக்கின்றன.

பத்தாம் வகுப்பிற் பயிலும் இராமலிங்கம் மட்டுமா, கண்ணும் கருத்துமாக வியாபாரத்தைக் கவனிக்காத காரணத்தால் ரூபா எழுபதாயிரத்தை இழந்த நல்ல பால செட்டியார், காசரோய்

(6-ம் பக்கம் பார்க்க)

[சிறு நாடகம்:—]

பெண்களாட்சியிலே

[நி. சு. இரத்தினம்]

நாடகத்தில் உலவும் உறுப்பினர்கள்

வசந்தா, அவள் அன்னை, வசந்தாவின் பத்து வயது தங்கை நிர்மலா, வசந்தாவின் தோழிகள்:—எலிஸி, சுகுணா, மார்கரெட், பிரேமா, ஒரு பிச்சைக்காரி, இராமநாதன், ரகுநாதன் முதலியோர்.

நிகழும் இடம்

வசந்தாவின் வீடு, எலிசியின் வீடு......இத்யாதி.

மற்றும், சட்ட சபை

காட்சி 1.

நாடக உறுப்பினர்கள்: வசந்தா, பிரேமா, சுகுணா, மார்கரெட், எலிஸி.

இடம்: வசந்தாவின் வீடு.

[மேஜையின்மேல் "நான் கண்ணீரைச் சிந்தினேன்" என்ற புத்தகம் விரித்தபடி இருக்கிறது. வசந்தா, இரு கைகளையும் மோவாயில் ஊன்றி சிந்தனைக் கடலில் மூழ்கியபடி இருக்கிறாள். அப்பொழுது வசந்தாவின் பள்ளித் தோழிகள், சுகுணா, எலிஸி, மார்கரெட், பிரேமா ஆகியோர் வசந்தாவின் அறைக்குள் நுழைகிறார்கள். சிந்தனை கலைகிறது.]

பிரேமா:—என்னடி வசந்தா! எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு தூரம் சிந்தனை செய்கிறாய்...

வசந்தா:—கோட்டையைப் பிடிக்க அல்லடி. ஆக்கிரமிப்பு எண்ணம்தான் எனக்குத் துளிக்கூடப் பிடிக்காதே! பிடித்த கோட்டையையும் விட்டுவிட்டோமே என்றுதான்...(பெருமூச்சுடன்) ஹும்...

சுகுணா:—என்னடி பெருமூச்சு!

மார்கரெட்:—இருக்காதா! படிப்பு முடிந்த உடன் தன் கைபிடிக்க வரும் கண்ணாளனை நினைத்து...

எலிஸி:—'எப்போ வருவாரோ'...என்று ஏங்குகிறாளாக்கும்.

வசந்தா:—போதுமடி, உன் குறும்புப் பேச்சு! நான் நினைத்தது...

பிரேமா:—நினைத்தது என்னவாம்! எங்களுக்கென்ன சோதிடமா தெரியும் சொல்லுவதற்கு.

சுகுணா:—'இரு கண்களையும் நன்றாக விழித்துப் பார்த்தாலே கிடைக்காத சுகம், ஒரு சோதிடனின் சொத்தைப் பிதற்றலிலா அகப்படும்' என்று ஒரு ஆசிரியர்...

மாக்கரெட்:— போதும் நிறுத்து உன் நாஸ்தீகப் பிரசாரத்தை! வசந்தா, சொல்லுடி அம்மா நீ!

வசந்தா:—(சற்று தயக்கத்துடன்) இல்லை; இல்லை. நம்முடைய பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு ஒரு நாடகம் நடித்துக் காட்டலாமா என்று யோசிக்கிறேன். (யோசித்து) எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆண்கள் அரசாட்சி செய்வதனால்தானே, பெண்களுக்கு உரிமையே இல்லை. பெண்கள் ஆட்சி மலர்ந்தால்....?

பிரேமா:—இந்த ஆண்கள், இதுவரை நம்மைப் படுத்திய பாட்டுக்கு, இந்த ஆண் வர்க்கத்தையே ஆட்டிப் படைக்கணும். ஆமாம்! அப்பதான் 'இது'களுக்குப்புத்திவரும். சரி! (மணியைப் பார்த்து) நேரமாய்விட்டது. வருகிறோம்!

எல்லோரும்:—நாளை வருகிறோம்!

[தோழிகள் செல்லுகின்றனர்]

திரை விழுகிறது.

காட்சி 2

நாடக உறுப்பினர்கள்:—வசந்தாவும், அவள் அன்னையும்

இடம்:—வசந்தாவின் வீடு.

[இருவரும் உரையாடுகின்றனர்]

அன்னை:—ஏண்டி வசந்தா! நேற்று என்னமோ 'நாடகம் கீடகம்னு' பேசிட்டிருந்தேயே, என்னடி இது! பொண்ணாப் பிறந்தவளா, லெட்சணமாத் தெரியலையே! நாலு ஆண்கள் மத்தியிலே கையையும் காலையும் ஆட்டிக்கிட்டு 'திங் திங்'கின்னு குதிக்கிறது நல்லாவாயிருக்கு!

வசந்தா:—(கலகலவென சிரிக்கிறாள்) என்னம்மா! சுத்தக் கட்டுப் பெட்டியாயிருக்கே! உலகம் முன்னேறிக்கிட்டு வருது!

அன்னை:—(கேலியுடன், முகத்தைத் தோள் பட்டையில்

இடித்து) உலகம் முன்னேறு தாயில்லே. அந்தக் காலத்திலே...(வசந்தா இடைமறித்து.)

வசந்தா:—அந்தக் காலத்திலே அது சரிம்மா! 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'னு இருந்தீங்க. அப்படி அடிமையாயிருக்கப் போய்த்தானே ஆண்வர்க்கம், நம்மினத்தை அடிமைப்படுத்த முடிஞ்சது.

அன்னை:—சரி! சரி! தலைக்கு மேலே வேலே கெடக்கு உன்னோடு பேசிட்டிருந்தா, வீட்டு வேலே ஒண்ணும் நடக்காது.

(உள்ளே போகிறாள்)

வசந்தா:—(உரத்த குரலில், அன்னையை அழைத்து) ஏம்மா! இங்கே பாரு! என்னை என்னென்னமோ சொன்னியே. இன்னைய பேப்பர்லே, அமதாபாத்தில் பெண்கள் கூட்டத்தில் நம்ம நேருஜி பேசினது போட்டிருக்கு. படிக்கிறேன், கேளு. (படிக்கிறாள்)

"தங்கள் பெண்மணிகளை சிறையில் வைத்திருப்பது போல், வீட்டுக்குள் அடைத்து வைத்திருக்கும் எந்தத் தேசமும் முன்னேறாது. பழைய கொள்கைகளை யெல்லாம், காலத்துக்குத் தக்கபடி மாற்றிக்கொள்ள வேண்டும்"

[படித்துமுடிக்கிறாள். யாரோ வரும் சத்தம் கேட்டு வசந்தாவின் தாயார் உள்ளே போகிறாள்.]

திரை விழுகிறது.

காட்சி 3

நாடக உறுப்பினர்கள்:—(வசந்தா பிரேமா, சுகுணா, மார்கரெட், எலிஸி, ஒரு பிச்சைக்காரி)

இடம்:—வசந்தாவின் வீடு.

(தோழிகள் பிரேமா, மார்கரெட், சுகுணா, எலிஸி ஆகியோர் வசந்தாவின் வீட்டுக்கு வருகிறார்கள்)

பிரேமா:—ஹலோ வசந்தா, குட் மார்னிங்!

சுகுணா:—வணக்கம்.

எலிஸி:—நமஸ்தே!

மார்கரெட்:—ஜெய் ஹிந்த்!

(வசந்தா, எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்து வரவேற்று உள்ளே அழைத்துச் செல்கிறாள். அவர்கள் பேசத் தொடங்கும்போது, "அம்மா" என்று ஒரு குரல் ஈனஸ்வரத்தில் லேசாகக் கூப்பிடுவது காதில் விழுகிறது)

வசந்தா:—(வெறுப்புடன்) இதென்னடா சனியன்! பொழுது விடிஞ்சா, பொழுது அடையும்வரை பிச்சைக்காரங்களுக்கு பதில் சொல்லவே, (மணியைப் பார்த்து) 'டயம்' சரியாய்ப் போகுது!

(இந்த நேரத்தில், அந்தப் பிச்சைக்காரி, அவர்கள் இருக்குமிடம் நோக்கி வருகிறாள்).

எலிஸி:— இதென்னடி! தெறந்த வீட்டிலே நாய் நொழைஞ்ச மாதிரி!

பிரேமா:—(கிண்டலாக) கனம் முன்ஷி திட்டத்தில் இப்பதானேடி 12 அவுன்ஸ் 6 அவுன்ஸாயிருக்கு. இப்போ, பிச்சைக்காரா நம்ம வீட்டுக்கு ஒவ்வொருத்தரா வர்ராங்க. முன்ஷியின் அடுத்த திட்டத்திலே பட்டினிப் பட்டாளமே படையெடுத்துடும்.

மார்கரெட்:—வீட்டுக்குள்ளே நொழைய மட்டுமா செய்வாங்க. வீட்டிலே ஆளில்லாட்டா, அகப்பட்டதைக்கூட சுருட்டிடுவாங்க!

(அவர்களுடைய சொல்லம்புகள் அந்தப் பிச்சைக்காரியின் இதயத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைக்கின்றன. திடீரென மயக்கமுற்றுக் கீழே விழுகிறாள்.)

ஒரு குரல்:—O. Fainted, வாட்டர், வாட்டர், கம் குயிக்.

(ஒரே பரபரப்பு)

திரை விழுகிறது.

காட்சி 4.

(அந்தப் பிச்சைக்காரிக்கு 'காப்பி' கொடுக்கப்படுகிறது. ஆயாசம் தெளிந்து, எழுந்து உட்காருகிறாள்; அப்போது...)

(9-பக்கம் பார்க்க)

குறிஞ்சிப்பாடி தி. மு. க.

பொதுக் கூட்டம்

அன்புடையீர் !

நாளது (21—10—51) ஞாயிறு மாலை 6 மணியளவில் விழப் பள்ளம் வாணுவர் வீதியில் நடைபெறும்.

அவ்வமயம்

தோழர் மு. கருணாநிதி

தோழியர் சத்தியவாணி முத்து

மற்றும் இயக்கத்தோழர்களும் பேசுவார்கள்.

மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்த கணவனைக் கட்டிக்கொண்ட காரணத்தால் கட்டிய மூன்றும் மாதத்திலேயே கழுத்துத் தாலியை இழந்த தையல் சுகுணா, உழைத்து உழைத்து ஓட்டாண்டிகளாக மாறும் நிலையில் பலரையும் அந்த உழைப்பின் பலனை உண்டு கொழுக்கும் உன்மத்த நிலையில் வேறு சிலரையும் நிறுத்திவைத்து வேடிக்கைபார்க்கும் இன்றைய முதலாளித்துவ சமுதாய அமைப்பு காரணமாக வறுமைத் தேளால் கொட்டப்பட்டு வேதனைக் கீதம் வாசிக்கும் பாட்டாளித் தோழன் கோபாலன், சூதுமதி படைத்த சனாதனச் சழக்கர்கள் பலர், பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்திவைத்த சாதிமுறை என்கிற மாபெருங் கொடுமை காரணமாகத் தாழ்த்தப்பட்ட சாதி என்று கூறி ஒதுக்கப்படுகிற பரிதாபத்திற்குரிய சிறுவன் தங்கப்பனின் தந்தை ஆகிய அத்தனை பேருமே, தத்தமக்கு ஏற்பட்டுள்ள துயர்மிகு நிலைமைகளுக்கான உண்மைக் காரணங்களை ஆராய்ந்து அறியாமல், இந்தத் துயரங்கள் அத்தனைக்கும் காரணம் தங்கள் தங்கள் தலைவிதிதான் என்று தவறாக முடிவு கட்டிவிடுகின்றனர்.

இராமலிங்கம்—தனபாலர்—சுகுணா—கோபாலன்—தங்கப்பனின் தந்தை—ஒவ்வொருவருடைய வாழ்க்கையை வதைக்கும் வேதனைக்கும் உண்மையான காரணங்கள் இவை இவை என்பது திட்டவட்டமாக நமக்குத் தெரிகிறது. ஆனால் அவர்களோ, தங்கள் வாழ்க்கையிலே ஏற்பட்டுள்ள விபரீத நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் தங்களுடைய முன் ஜென்மத் தீவினை காரணமாக ஏற்பட்டுள்ள தீய விளைவுகளே என்று திட்டமாக நம்புகின்றனர்.

"முன் ஜென்மம்—பின் ஜென்மம்—பல ஜென்மம் என்பதெல்லாம் வெறும் பொய். இறந்தவர்கள் மீண்டும் புதுப் பிறவியெடுக்கின்றனர் என்பது ஆதாரமற்ற கற்பனை. மோட்சம்—நரகம்—பாவம்—புண்ணியம்—தலைவிதி—பிரம்மன் எழுத்து—இவை யெல்லாம் ஆதாரமற்ற வெறுஞ் சொற்கள். ஒரு முறை பிறக்கிறோம்—சில பல காலம் வாழ்கிறோம்—பிறகோர் நாள் இறக்கிறோம்—இறந்ததும் நம் உடலில் உள்ள மண் மண்ணோடு, காற்று காற்றோடு, நீர் நீரோடு என்ற வகையிலே நம் உடல் உலகத்தோடு இரண்டறக் கலந்து மக்கி மடிந்து உலகப் பொருள்களோடு இணைந்து போய்விடுகிறது—இதுதான் உண்மை," என்றெல்லாம், அறிவியல் நூலாகிய விஞ்ஞானம், ஆயிரமாயிரம் ஆதாரங்களைக் காட்டி, அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது. என்றாலுங்கூட, இந்தியர்கள், இல்லாத முன் ஜென்மத்தை எண்ணிக்கொண்டு, வேண்டாத அச்சத்தை உள்ளத்தில் வளர்த்துக்கொண்டு, எதற்கெடுத்தாலும் விதி—விதி—என்ற வீணுரையைப் பகர்ந்துகொண்டு, தன் முயற்சி அற்றவர்களாகச் செத்த வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

தலைவிதி என்கிற தவறான தத்துவம், இந்திய மக்களுடைய சிந்தனையைச் சிறைப்படுத்திப் பகுத்தறிவைப் பாழ்படுத்தித் தன் முயற்சியைத் தலையெடுக்கவொட்டாது அடித்து வீழ்த்தி, என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை என்கிற சோம்பேறி வேதாந்தத்தை நாடெங்கும் வளரச் செய்துவிட்டிருக்கிறது.

இந்திய மக்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கும் மகத்தான முட்டுக்கட்டையாய் அமைந்திருப்பது இந்தத் தத்துவம்தான்.

நம்முடைய சமுதாயத்தில் ஆயிரக்கணக்கான சாதிகளையும் அந்தச் சாதிகளுக்குள் பல உட்சாதிகளையும் உண்டுபண்ணி, நாடெங்கும் பகைமையையும் பூசலையும் பிளவையும் பேதத்தையும் தழைத்தோங்கி வளரச் செய்திருப்பதும் இந்தத் தத்துவம்தான்.

எப்பொழுது பார்த்தாலும் அடுத்த ஜன்மக் கற்பனையைப் பற்றிய சிந்தனை செய்துகொண்டிருக்கும் காரணத்தால் இந்த உலகத்தில் இப்பொழுது வாழும் வாழ்க்கையை இனிமையானதாகவும் சுவையுள்ளதாகவும் வசதிகள் நிரம்பியதாகவும் மாற்றி அமைத்து மறுகோலம் செய்ய வேண்டுமே என்கிற உணர்ச்சியே இல்லாத உருவங்களாக நம்முடைய மக்களை உருவாக்கியிருக்கிய உதவாக்கரைப் பண்பு படைத்ததும் இந்தத் தத்துவம்தான்.

சுதந்தர இந்தியா அடிமை இந்தியாவாக மாறியதற்கும், அந்த அடிமை இந்தியா மீண்

"போர்வாள்"
சந்தா விவரம்

★

ஓராண்டு	ரூ. 6 8 0
6 மாதம்	ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

டும் சுதந்திர இந்தியாவாக மாறிய பிறகு, அந்தச் சுதந்திர இந்தியா சுபீட்ச இந்தியாவாக மாறாமல் இருப்பதற்குமுரிய முக்கியமான காரணம் இந்தத் தலைவிதி தத்துவம்தான்.

இந்தத் தலைவிதி தத்துவத்தால், இந்தியத் துணைக்கண்டத்துக்கும், இந்தத் துணைக் கண்டத்திலே வாழுகின்ற கோடிக் கணக்கான மக்களுக்கும், அந்த மக்களுடைய அன்றன்றாட வாழ்க்கைக்கும் ஏற்பட்டுள்ள இடையூறுகளும் இழிநிலைகளும் ஏராளம்.

நம் சமுதாயத்துக்கும் மக்களுக்கும் இந்த அளவு இடையூற்றையும் இழிநிலையையும் ஏற்படுத்தித் தந்துள்ள தலைவிதித் தத்துவத்தைப் பகுத்தறிவற்ற பாமர மக்கள் நம்புவதிலே ஆச்சரியமேதுமில்லை. மூட நம்பிக்கையையே உணவுப் பொருளாகவும், மதமாயையையே உடுக்கும் உடையாகவும், பழமைப் பித்தத்தையே இருக்கும் இல்லமாகவும் கொண்டுள்ள இந்நாட்டுப் பாமரர்கள், தலைவிதி ஏற்பாட்டை உண்மையெனக் கொண்டு அஞ்சி நடுங்குவது இயற்கைதான்.

ஆனால் அறிவின் சிகரம் என்றும், சிந்தனைச் சிற்பி என்றும், புத்துலக வழிகாட்டி என்றும் சீர்திருத்தச் செம்மல் என்றும், தேசிய வாதிகளால் போற்றிப் புகழப்பட்டும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்கூட இந்தத் தலைவிதித் தத்துவத்திற்குத் தலைவணங்கும் பண்பு படைத்தவராக இருக்கிறார் என்பதைக் காணும்போதுதான் நம்முடைய ஆச்சரியம் அளவு கடந்ததாக மாறுகிறது.

சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கணவனிடமிருந்து விவாகவிடுதலை பெற்று தம் மனதிற்குப் பிடித்த வேறு மணாளனை மணந்து கொள்ளும் உரிமை, பெற்றோர் சொத்தில் பங்கு பெறும் உரிமை ஆகிய இந்த இரண்டு உரிமைகளை இந்து மதப் பெண்கள் சமுதாயத்திற்கு அளிக்கும் தன்மை படைத்தது—இந்துச் சட்டத் திருத்த மசோதா.

இந்த மசோதா, 1947 ஏப்ரல் 11-ம் நாளன்று டில்லியில் உள்ள பாராளுமன்றத்தில் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது.

1947
1948
1949
1950
1951

ஆண்டுகள்—மாதங்கள்—நாட்கள் ஒவ்வொன்றாக உருண்டோடிக்கொண்டேயிருந்தன. ஆனால், மசோதா மட்டும் சட்டமாக நிறைவேற்றப்படவில்லை.

பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் இந்த மசோதா அவசியம்—அவசியம் என்று அழுத்தந்திருத்தமாக அறிவித்தனர். என்றாலும், மசோதா, சட்டமாக்கப்படவில்லை.

பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், இந்தியாவின் முதலமைச்சருமாகிய பண்டித நேரு, "என் மந்திரிசபையின் மீது பாராளுமன்றத்திற்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை இந்த மசோதாவை அந்த மன்றம் ஒப்புக்கொள்கிறதா இல்லையா என்பதைக் கொண்டுதான் நான் தீர்மானிக்க இருக்கிறேன். இந்த மசோதா தோற்கடிக்கப் பட்டால் என் மந்திரிசபை உடனடியாக இராஜினாமா செய்துவிடும்" என்று உரத்த குரலில் உலகறிய முழக்கமிட்டார் — என்றாலும் மசோதா சட்ட புத்தகத்தில் ஏறவில்லை.

1947 ஏப்ரல் 11-ம் நாள் முதல், 1951 செப்டம்பர் 26-ம் நாள் வரை, மசோதா, டில்லி பாராளுமன்றத்தில் ஓயாமல் உலவிக் கொண்டேயிருந்தது. என்றாலும் மசோதா சட்டமாக்கப்படவில்லை.

மக்களிடத்திலே, ஆதரவு, அமோகம்.

பாராளுமன்றத்திலே, பாராட்டு, ஏராளம்.

மன்ற உறுப்பினர்களிலே, பெரும்பாலோர், மசோதாவின் ஆதரவாளர்கள்,

முதலமைச்சர் நேருவோ, மசோதாவின் வாழ்வு தாழ்வைத் தன்னுடைய சொந்த வாழ்வு தாழ்வாகக் கருதுகிற அளவு, மசோதாவிடம் மட்டற்ற காதல் கொண்டவர்.

மசோதாவை நிறைவேற்றுவதற்கான காலமோ தேவையைவிட அதிகமாக இருந்தது—நான்கு ஆண்டுகளும் ஐந்து மாதங்களும் பதினொரு நாட்களும் கிடைத்தன மசோதாவை நிறைவேற்ற.

என்றாலும் மசோதா நிறைவேறவில்லை.

ஏன்?

இந்த "ஏன்" என்ற கேள்விக்குத்தான், பண்டித நேரு, டாக்டர் அம்பேத்காருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலே பின்கண்ட வண்ணம் விடைகூறியிருக்கிறார்:—

"இந்த மசோதாவைப் பாராளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தின்போதே நிறைவேற்றிவிட வேண்டுமென்று நான் எவ்வளவோ முயன்று பார்த்தேன். ஆனால் விதியும், பாராளுமன்றத்தின் நடைமுறைச் சட்டங்களும் நமக்கு விரோதமாக இருக்கும் காரணத்தால் நான்

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 20—10—51 சனிக்கிழமை

இரண்டு குண்டுகள்

இஸ்லாமியர் உலகத்தின் இணையற்ற ஜோதிகளில் ஒருவர்—மாவீரர் ஜின்னாவின் வலது கைபோல் விளங்கியவர்—பாகிஸ்தான் பொதுமக்களின் இருதய கீதமாக உலவியவர்—அஞ்சா நெஞ்சு படைத்த அறப்போர் வீரர் என அனைவராலும் பாராட்டப்பட்டவர்—தொடுத்த காரியத்தை முடித்தன்றி ஓயாத செயல் திறம் படைத்த செம்மல்—காரிருளையும் கடும் புயலையும் இலட்சியம் செய்யாமல் பாகிஸ்தான் கப்பலைப் பக்குவமாக ஓட்டிவந்த அதன் அருமை மாலுமி—தோழர் லியாகத் அலிகான்.

அருந்திறல் படைத்த இத்தகைய அண்ணலைத்தான், சிறியதொரு துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட இரண்டு குண்டுகள், இந்த வாரம், இந்த உலகத்தைவிட்டுப் பறித்தெடுத்துக்கொண்டு சென்று விட்டன.

16—10-51 செவ்வாய்க்கிழமை [illegible] மாலை ராவல்பிண்டி என்னும் நகரத்தில், ஆயிரமாயிரம்மக்கள் நிரம்பிய மகத்தானதோர் பொதுக்கூட்டத்தில் தோழர் லியாகத் அலிகான் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஏற்பாட்டுக்கிணங்க மேடையும் அமைக்கப்பட்டது—மக்கட்கடலும் திரண்டு குழுமிற்று—பிரதமர் லியாகத்தும் தயாராக வந்திருந்தார்—பொதுக்கூட்டமும் குறித்த நேரத்தில் தொடக்கமாயிற்று.

வரவேற்பிதழ்கள் பல படித்தளிக்கப்பட்ட பின்னர், லியாகத் அவர்கள் எழுந்தார் பேச! இரண்டொரு சொற்களைக்கூட அவர் சொல்லி முடிக்கவில்லை! அதற்குள் யாரோ ஒரு பேயன்—பித்தன்—பொது வாழ்வின் புனிதத்தன்மையை அறியாத ஓர் கசடன்—மக்கட்பண்பை இழந்த ஓர் கயவன் துப்பாக்கி கொண்டு இருமுறை சுட்டுவிட்டான் அம்மாபெருந் தலைவரை.

தலைவர் மார்பைத் துளைத்தன குண்டுகள்—கீழே சாய்ந்தார் தலைவர்—பிறகோ, மாண்டார்—மாநிலத்தைவிட்டு மறைந்தார்.

தலைவர் லியாகத் அலிகானின் மறைவு பாகிஸ்தான் பூமிக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

பாகிஸ்தானை உருவாக்கிய அதன் தந்தை ஜின்னா மறைந்த பிறகு அந்த நாட்டைப் போற்றி வளர்த்துச் சிறப்புடன் பாதுகாத்த அருமைத் தொண்டிற் பெரும் பகுதி தோழர் லியாகத் அலிகான் அவர் [illegible] களுடையதே ஆகும்.

தோழர் லியாகத், பாகிஸ்தானத்துக்குப் பிரதமராக இருந்துவந்தார். பிரதமராக மட்டுமா இருந்துவந்தார்—இல்லை—அதன் ஈடு இணையற்ற தலைவராக—ஒப்பு உவமையற்ற தோழராக—மாற்றுக் காண முடியாத மாபெரும் ஆலோசகராக—சிறந்த பாதையைக் காட்டிய சீர்மிகு வழி காட்டியாக—ஆம்—பாகிஸ்தானத்தின் தனிப்பெரும் ஜோதியாக ஒளி வீசி வந்தார்.

பாகிஸ்தான் ஜோதி லியாகத், இந்தியாவுக்கு ஒரு நண்பராகவும், உலகத்துக்கு ஒரு தோழராகவும், சிறந்த ராஜதந்திரத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும், அரசியல் வட்டாரத்திற்கு ஓர் அணிகலனாகவும், பொது வாழ்வு மண்டலத்தில் பிரகாசமான தோர் நட்சத்திரமாகவும் விளங்கி வந்தார்.

இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்துப்பட்டம் பெற்ற லியாகத் 1922ல் இந்தியா திரும்பினார். இந்தியாவுக்குத் திரும்பினாரோ இல்லையோ, பொது வாழ்வு, அவரை, வருக வருக என இருகை கூப்பி அழைத்தது. அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு 1923ல் பொது வாழ்வு எனும் போர்க்களத்தில் புன்னகை பூத்த முகத்துடனே குதித்து விட்டார் லியாகத்.

இங்கிலாந்திலிருந்து வழக்கறிஞராகத் திரும்பி வந்த 1923ல் தொடக்கமாகிய அவருடைய பொது வாழ்வு, 1951ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17ம் நாள்மாலை இரண்டு குண்டுகளால் இந்த உலகத்தைவிட்டு விலக்கப்பட்டாரே அந்தக் கடைசி விநாடிவரை, தங்கு தடையின்றி, இடையீடு ஏதுவுமின்றி தொடர்ந்து நடந்து வந்த சுவை மிக்க ஒரு தொடர் கதை.

வழக்கறிஞர் பட்டத்தை இங்கிலாந்து அவருக்கு அளித்ததே தவிர ஒரு நாள்கூட அவரால் வழக்கறிஞர் தொழில் புரிய முடியவில்லை—புரிய விடவில்லை அவருடைய பொது வாழ்வு.

மக்களுக்காக வாழ்ந்து, மக்களுக்காக உழைத்து, மக்களுக்காகவே மாண்டார் மக்கள் தலைவர்களில் ஒருவராகிய லியாகத்.

அவரைப் பிரிந்து வாடும் பாகிஸ் [illegible] தானுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உரியனவாக.

துறையூர் தி. மு. க. ஆண்டுவிழா

21—10—51 ஞாயிறு காலை 9-30 மணிக்கு நாகர் கோவில் திரு. கி. மனோகரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். A. P. தர்மலிங்கம், M. S. மணி சொற்பொழிவாற்றுவர்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை:—(இரக்கத்துடன், நீ யாரும்மா! எந்த ஊரு!

பிச்சைக்காரி:—(மெல்லிய குரலில்) நான் ஒரு அபாக்ய வதி! ஊர் சேலம்; கைத்தறி நெசவாளர் குலம்...

பிரேமா:—(அவளை இடைமறித்து) சேலமா! சேலத்தில் இப்பெ ரூதா கைத்தறி நெசவாளர் நிலைமை........

பிச்சைக்காரி:—அதை ஏன் கேக்கிங்க! சேலத்தில் நெசவாளர் நெலைமை நெனச்சாலே, வயிறு பத்தி எரியுதும்மா!

எலிஸி:—அப்போ, உன் கதை.

பிச்சைக்காரி:—என் கதை! கடந்த ஆறுமாதத்துக்கு முன்பு நானும் அவரும், எங்க ரெண்டு புள்ளைகளோடே 'கடவுள் கிருபை'யால நல்லாத்தான் வாழ்ந்து வந்தோம், திடீரென்று ஏற்பட்ட நூல் பஞ்சத்தால் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் எங்களைச் சூழ்ந்துட்டுது. புசிப்பதற்குப் புளியங்கொட்டை திங்கலாம்னு பாத்தா, அதுவும் கெடைக்கலே. கொஞ்ச நஞ்சம் கையிலிருந்ததையும் வித்துத் தின்னுப்புட்டோம். மூணு நாளாப் பட்டினி, மறு நாள், வேலை தேடி வெளியே சென்ற [illegible] என் கணவர் இன்னமே வரப் போறாரு.

தோழிகள் அனைவரும்:—அப்புறம்.......!

பிச்சைக்காரி:—(பெரு மூச்சுடன்) ஹூம்...பசிக்கொடுமை தாங்காமல், பசலைகள் பதறித் துடித்தன, குழந்தைகளின் முகத்தைப் பார்க்கும்போது, என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. கள்ள ரயிலேறி மதுரை வந்தேன். என் நெலமையை எடுத்துச் சொல்லிக் கெஞ்சியும், 'டிக்கட் இல்லே'ன்னு சொல்லி, கீழே எறக்கி வுட்டுட்டானுவ, பாவிப் பயலுவ. மதுரையில்........(விக்கி விக்கி அழுகிறாள்) பசி மயக்கத்தினால் தூங்கிட்டேன். காலையிலே பாக்கும்போது, என் செல்வங்களில் ஒன்று குளிரால் விறைத்து செத்து விட்டது. அடுத்ததும் செத்துவிடுமோ என்றஞ்சி, என் குஞ்சுவிரல் பாலகனை அஞ்சு ரூபாய்க்கு வித்தேன். அதைக் கொண்டு இங்கே வந்தேன்......

நிர்மலா:—(10 வயது ச்.ச்.ச். ஐயோ பாவம்! (தன் அம்மாவைப் பார்த்து) இவ நம்ம வீட்டிலேயே இருந்துட்டுப் போகட்டுமே. (அன்னை சரி என்கவே, வசந்தா பிச்சைக்காரியைப் பார்த்து)

வசந்தா:—என்னம்மா! நீ என்ன சொல்றே!

பிச்சை:—சொல்றது என்னுங்க! நீங்க மகராசியா இருக்கணும்.

திரை விழுகிறது.

காட்சி 5.

நாடக உறுப்பினர்கள்:—பிரேமா, வசந்தா, மார்கரெட் சகுணா, எலிஸி

இடம்:—எலிஸியின் வீடு.

எலிஸி:—ஏடி! வசந்தா! அந்த 'சேலத்துக்காரி'க்கு எப்படித்தான் புள்ளைகளை விற்க மனசு வந்ததோ?

வசந்தா:—அவ. என்னடி செய்வா. எல்லாம் அரசாங்கத்தைச் சொல்லணும்.

எலிஸி:—போடி! உனக்கு எப்போ பார்த்தாலும் அரசாங்கத்தைக் குத்தம் சொல்றதே வழக்கமாய்ப் போச்சு.

வசந்தா:—அரசாங்கம் என்னடீ பண்ண முடியும்

(ஆத்திரத்துடன்) என்ன செய்யுமா? நால் பத்தா

(12-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. தோழர்கட்கு!

முக்கிய வேண்டுகோள்.

ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் ஆகியவற்றின் [illegible] செயலாளர்கள் கீழ்க்கண்ட விவரங்களை அன்புகூர்ந்து [illegible] யாக எமக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறோம்.

1. கிளைக்கழகம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர்.

2. கிளைக்கழகத்தின் தற்போதைய செயலாளர், துணைச் செயலாளர், பொருள் உதப்பினர், விளம்பர உறுப்பினர்களின் பெயர்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
"போர்வாள்" அலுவலகம்
147 பவழக்காரத் தெரு
சென்னை 1.

இங்ஙனம்
"போர்வாள்" ஆசிரியர்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படிச் செய்ய முடியாமற் போய்விட்டது."

27—9—51 அன்று, நேரு, டாக்டர் அம்பேத்காருக்கு எழுதிய கடிதத்திலே இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

விதி விரோதமாக இருந்து தடுத்துவிட்டதாம் இந்தச் சட்டத்திருத்த மசோதாவை!

கூறுகிறார் பண்டித நேரு வெட்கம் துளியும் இல்லாமல்!

"நானோர் நாஸ்திகன் — எனக்கு ஆண்டவனிடத்திலே நம்பிக்கையில்லை" என்று முன்னர் ஓர் நாள் வழக்கு மன்றத்திலே மார்தட்டிப் பேசிய மாவீரர்தான் இப்போது கூறுகிறார், விதி விரோதமாக இருந்த காரணத்தால்தான் மசோதா நிறைவேறாமற் போய்விட்டதென்று!

பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிடையேயும் சரி, வெளியே பொதுமக்களிடையேயும் சரி, இந்தச் சட்டத் திருத்த மசோதாவுக்கு, தேவையைவிட அதிகமான அளவு ஆதரவும் பாராட்டும் இருந்திருக்கின்றன.

காங்கிரஸ் கட்சிக் கூடாரத்தில் உலவிய சில செல்வாக்குள்ள சனாதன பிம்பங்கள்தான் இந்த மசோதாவை எதிர்த்தன. மற்றபடி, நாட்டிலே, இந்த மசோதாவுக்குக் குறிப்பிடத்தக்க அளவு எதிர்ப்பு ஏதுமில்லை.

மக்கள் மன்றம், பாராளுமன்றம், இரண்டு இடங்களிலேயும் ஆதரவு அமோகமாக இருந்தும் தன் கட்சி வட்டாரத்தில் உலவிய சனாதனச் சழக்கர்கள் சிலரின் முறைப்புக்கும் முணுமுணுப்புக்கும் அஞ்சி நடுங்கிய ஒரே காரணத்தால், நேரு, மசோதாவை, மனந்துணிந்து மரணபுரிக்கு அனுப்பிவைத்து விட்டார்.

விரல்விட்டு எண்ணிடக்கூடிய அந்தச் சனாதனத் தலைவர்களின் சலசலப்பைத் துச்சமென ஒதுக்கித் தள்ளுகிற தைரிய சுபாவம் நேருவுக்கு இல்லை— எனவேதான் மசோதா நிறைவேற்றப் படவில்லை.

ஆனால் பண்டித நேரு காரணம் காட்டுகிறார், விதி நமக்கு விரோதமாக இருந்தது—ஆகவேதான் மசோதா நிறைவேறவில்லை என்று!

பகுத்தறிவுப் பாதையில் நடக்கும் பண்பும் பக்குவமும் படைத்தவர் நேரு என்று நாடு நம்பிக்கொண்டிருக்கிறது.

ஆனால் நேருவோ, இந்தச் சட்ட மசோதா நிறைவேறாததற்குக்கூட விதிதான் காரணம் என்று எண்ணுகிற அளவு விசித்திர சித்தம் படைத்த வைதீக வாதியாக இருக்கிறார்.

தொட்டதற்கெல்லாம் தலைவிதியைக் காரணமாகக் காட்டி, தன்முயற்சியில் நம்பிக்கையிழந்து, தங்கள் வாழ்க்கையை வேதனைக்கூடமாக்கிக் கொண்டிருக்கும் இராமலிங்கம்—தனபாலர்—சுகுணா—கோபாலன்—தங்கப்பன் தந்தை ஆகியோருக்கும், இந்தச்சட்ட மசோதா நிறைவேறாததற்குக் காரணம் விதி செய்த சதி என்று வீண்வாதம் பேசுகின்ற வீரர் ஜவகர்லாலுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? அதுதான் நமக்குப் புரியவில்லை.

இந்தியா முன்னேற்றப்பாதையில மடமடவென நடந்து செல்லவேண்டுமானால் தலைவிதிக் கொள்கை தவிடுபொடியாக்கப் பட வேண்டும்.

ஆனால் முன்னேற்றப் பாதையில் இந்தியாவை முடுக்கிவிடுவதாகச் சொல்லி முன்வந்திருக்கும் பண்டிதரோ தலைவிதிக் கொள்கையைத் தலைமேல் தாங்கி நடக்கும் பண்புபடைத்தவராக இருக்கிறார்.

இத்தகு நிலையில், "பண்டித நேருவின் தலைமை, இந்தியாவுக்குத் தருவது நல்ல நிலைமை" என்று, தேசியகீதம் பாடுகிறார்களே பாடத்தெரிந்த பாரத புத்திரர்கள், அந்தக் கீதத்தாலே, என்ன நன்மை விளையமுடியும் நாட்டுக்கு?

போலீசாரின் பொய் வழக்கு

அதிகாரிகள் தி. மு. க. கழகத்தின் மீது பாய்கின்றனர்

கோவை நகரில் தி. மு. க. வின் வளர்ச்சி கண்டு பொறாமை கொண்டு, அதை அழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு காங்கிரஸ் எத்தர்களும், எலெக்ஷன் ஏஜண்டுகளும் புது முறையைக் கையாண்டுள்ளனர்.

23—9—51-ல் சிதம்பரம் பூங்காவில் தென் கோவை தி. மு. கழக சார்பாக நாஞ்சில் தோழர் கி. மனோகரன் அவர்களைக் கொண்டு 20000 த்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது அக்கூட்டத்தின் வெற்றியைக் கண்ட எத்தர்கள், அக்கூட்டம் இரவு 9 மணிக்கே முடிக்கப்பட்டும் கூட, இரவு 12 மணிவரை நடத்தியதாக பொய்க் குற்றம் சாட்டி தென் கோவை தி. மு. க. செயலாளர் தோழர் கி. வெ. முத்து அவர்கள் மீது போலீசார் 75 வது செக்ஷன்படி வழக்கு தொடுத்துள்ளனர். வழக்கு 27-10-51-ல் பெஞ்சு மாஜிஸ்ட்ரேட் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வரவிருக்கிறது. மேற்படி வழக்கிற்காக இந்நகர் பிரபல வழக்கறிஞர் V செந்தாமரைக் கண்ணன் B.A.,B.L., (அட்வகேட்) அவர்கள் வாதாட முன் வந்துள்ளார்.

மேலும் இவ்வநீதியைக் கண்டிக்கும் பொருட்டு வழக்கில் நம் தரப்பில் சாட்சியம் கூற சர்க்கார் சிப்பந்திகளும், பிரபல வியாபாரிகளும் தாமாகவே முன் வந்துள்ளனர்.

தோழர்கள் சே. சு. ராசமாணிக்கம், வெ. கிருட்டிணமூர்த்தி, ஜானகிராம், பாலசுந்திரம் ஆகியோர் வழக்குசம்பந்தமான காரியங்களைக் கவனித்து வருகின்றனர்.



பரிவின்பன் தாமதம் செய்யாமல் அவ்வுடைவாளைக் கிழவனிடமிருந்து வாங்கித் தன் தொடையில் ஒரு கீறலை யுண்டுபண்ணினான். இரத்தம் கசிந்து கொண்டிருந்த தன்னுடைய தொடைக் காயத்தினுள்ளிருந்து ஒரு சிறு குச்சியை வெளியே எடுத்தான் கிழவன். தன்னுடைய மொட்டை விரல்களின் உதவியோடு மிகவும் கஷ்டத்தோடு அதை அவன் வெளியே எடுத்தான். இரண்டங்குல நீளமுள்ளதாக இருந்த அந்தக் குச்சி இரத்த மெருகேற்பட்டு தன் சுய உருவத்தை மறைத்துக் கொண்டிருந்தது. அதைக் கிழவன் உதயனிடம் தந்து கிணற்றில் அதைக் கழுவிவரச் செய்தான். பிறகு அதைத் தன் மொட்டை விரல்களின் உதவியால் அவனிடமிருந்து வாங்கிப் பரிவின்பனிடம் கொடுத்து அதை அவனுடைய தொடைக்காயத்தில் வைத்துப் பொருத்துமாறு சொன்னான். பரிவின்பன் அப்படியே செய்தான். பிறகு கிழவன் தன் மடியில் முடிந்திருந்த முடிச்சியைத் தன் எதிரே நின்றுகொண்டிருந்த உதயனை அவிழ்க்குமாறு சொன்னான். பிறகு அதனுள்ளிருந்த பச்சிலைகளை அரைத்துச் சாந்தாக்கி வருமாறு கூறினான். உதயன் அப் பச்சிலைகளைச் சாந்தாக அரைக்க, சற்றுதூரத்திலிருந்த ஒரு பாறாங்கல்லை நோக்கி நடந்தான். அவன் முகத்திலே குழப்பச்சாந்து பூசப்பட்டிருந்தது. சந்தேகக் கீறல்கள் தோன்றின.

பரிவின்பனுக்கும் உதயனுக்கும் ஒன்றும் விளங்கவில்லை. கிழவன் தங்கள் அன்புக்கும் பரிதாபத்திற்கும் உரியவனாகவும், தங்கள் நலத்திலும் நாட்டின் நலத்திலும் மிகுந்த நாட்டம் செலுத்துகிறவனாகவும் இருப்பதைத் தாங்கள் உணர்ந்திருந்ததால் அவன் கூறியவைகள் யாவையும் தடையின்றிச் செய்து முடித்தார்கள், பரிவின்பனும் உதயனும்! பிறகு அதன் காரணங்களையறியத் துடித்தார்கள்.

பரிவின்பனின் முகத்திலே ஆச்சரியக் குறிகளும் கேள்விக் குறிகளும் குறுக்கும் நெடுக்குமாகத் தோன்றுவதைக் கண்ட கிழவன் இளநகைப்போடு,

'என்ன தம்பி? ஒன்றும் புரியவில்லையா? எதற்காக இந்தச்செயல் என்று கேட்கிறாயா?" என்றான்.

"ஆமாம் பெரியவரே!" என்றான் பரிவின்பன்.

"கத்தியால் உடலில் காயம் உண்டாகச் செய்தேன் என்பதற்காகக் கோபம் கொள்ளாதே. உனது நன்மைக்காகத்தான் இந்தச் செயல். இந்த இரகசியம் உனக்கு விளங்காதுதான். அதை உனக்கு விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன். என் அருகில் வா!"

பரிவின்பன் இன்பதாசனின் அருகில் சென்றான், அவன் அவன் காதில் மெதுவாக ஏதேதோ கூறி விளக்கினான். பரிவின்பன், அவன் கூறியவைகளை ஆனந்தத்தோடு கேட்டுக்கொண்டு,

"மிக்கநன்றி பெரியவரே! நான் உம்மை நெய்தலில் அவசியம் சந்திக்கிறேன். எனக்கு இப்பொழுது ஓர் எண்ணம் எழுகிறது. எனக்கு ஒரு நண்பர் நெய்தலில் இருக்கிறார். அவரும் ஓர் ஓவியர். தன் வயது முதிர்ந்த தாயாரோடு ஒரு தோப்பில் வாழ்ந்து வருகிறார். அவர் உம்முடைய மகனாகவும் அந்த அம்மையார் உமது மனைவியாகவும்தான் இருக்க வேண்டுமென்று நான் எண்ணுகிறேன். நீர் அங்கு அவர்களைச் சந்தியுங்கள்!"-பரிவின்பன் அன்பும் நன்றியும் தோய்ந்த குரலில் பேசினான்.

"அப்படியா?........இருக்க முடியாது பரிவின்பா! அவர்கள் செத்து விட்டதாக நம்பக்கூடிய வட்டாரங்களிலிருந்து எனக்குச் செய்திகள் கிடைத்தன தம்பி! அங்ஙனம் அவர்கள் என் மனைவியும் மகனுமாக இருந்தால் நான் களிப்பின் கரையைக் கண்டுவிடுவேன் தம்பி!' கிழவன் தன் கண்களில் கண்ணீர் வடியப் பேசினான்.

'பெரியவரே! நீ அவர்களை அவசியம் சந்தியும். நாங்கள் விடைபெற்றுக்கொள்கிறோம்!" என்றான் பரிவின்பன்! உதயன் பச்சிலைச் சாந்துடன் அங்கு வந்து அதைப் பரிவின்பனின் தொடைக் காயத்திலும் கிழவனின் தொடைக்காயத்திலும் வைத்துக் கட்டி முடித்ததும்,

"பரிவின்பா! உதயா! சென்று வாருங்கள். ஒன்றைச் சொல்லாமல் விட்டேனே!...ம்...ஆமாம். நீங்கள் வழியில் **கோமக வீரன்** என்னும் ஒரு பெருவீரனைச் சந்திப்பீர்கள். அவன் ஒரு உண்மை வீரன். பாலைநாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவன். நாட்டின் நலத்திற்காகத் தன் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்தவன். பாலையில் புரட்சி செய்யப் பல திட்டங்கள் தீட்டிக்கொண்டிருக்கிறான் அவன். அவனை நீ சந்திக்கும் போது இன்னும் பல விஷயங்களை நீ அவன் மூலம் தெரிந்துகொள்வாய். பரிவின்பா! சரி. நீங்கள் சென்று வாருங்கள்! ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள்!" என்று கூறி அவர்களை வழியனுப்பினான் கலைஞன். அவர்களிருவரும் அவனை வணங்கி விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் குதிரைகள் காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தன.

கலைஞன் நெய்தல் நாடு நோக்கி நடந்தான். நெய்த நன்னாட்டினுள் அடியும் எடுத்து வைத்துவிட்டான். அந்நாட்டின் இனிய கடற்கரைக் காட்சி அவன் கண்களைக் கவர்ந்தது. அந்தி சாய்வதற்குள்ளாக, பரிவின்பன் குறிப்பிட்ட அந்தத் தோப்பையுடைய அவன் விரைவாக நடந்துகொண்டேயிருந்தான்.

(தொடரும்)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

துண்ணு சொல்லி, சேவகர்கள் கூட்டம் போட்டால், கூட்டத்துக்கு 144 போடுது. ஊர்வலம் போனால் தடியடிப் பிரயோகம்; கண்ணீர்ப்புகைப் பிரயோகம். மறியல் செய்தால், கைது பண்றாங்க. சொந்த அரசாங்கத்தை எதிர்த்து வேணும்னு மறியல் செய்றாங்க! ஏன் மறியல் செய்ய ஆரம்பிக்கிறாங்கன்னு அறிய முனையனும் மூல காரணத்தைக் கண்டு அதைக் களைய முனையாமல், எதை எதையோ செய்கிறது, இந்த ஆண்கள் அரசாங்கம். நாளைக்கொரு பேச்சும், வேளைக்கொரு திட்டமும் போட்டால், நாடு எப்படி உருப்படும். இந்த ஆண்கள் அரசாங்கம், உருப்படியாக ஆக்க வேலை என்ன செய்திருக்கு. பெண்களுக்குச் சொத்துரிமை, விவாக விடுதலை, மனமொத்த மணம், குடும்ப வாழ்க்கையில் சம அந்தஸ்து—இவைகளை நமக்கு ஒரு போதும் அளிக்காது, இந்த ஆண்களாட்சி.

ஈவிஸி:—ஏது! பெரிய 'லெக்சர்' அடிச்சிட்டியே! அதிகாரம் தன் கையிலிருக்கிற காரணத்தால், எதையும் செய்யத் துணியும், 'இரக்கமெனும் ஒரு பொருளில்லா' இதயமற்ற ஆண்கள் கூட்டம்.

சுகுணா:—எப்படி நம்மை அடக்க முடியும். சமீபத்திலே அமெரிக்காவிலே நடந்த தேர்தலில் 30 ஸ்தானங்களுக்கு, 29 ஸ்தாபனங்களைப் பெண்கள் கைப்பற்றிவிட்டார்களாம். அதுபோல, நம்ம தேசத்திலேயும் வரப்போகிற பொதுத் தேர்தலில் பெண்கள் அனைவரும் பெண்களுக்கே ஓட்டளிப்பதாயிருந்தால், அதிகாரத் திமிர் பிடித்தலையும், இந்த ஆண்கள் ஆட்சி அடியோடு ஒழியும். அதன் கல்லறைமீதுதான் நம் ஆட்சி—பெண்கள் ஆட்சி பூத்துக் குலுங்கும், புது மணப்பெண் போல. ஒவ்வொரு நாடு நகரங்களிலும், பட்டி தொட்டியிலும், மாதர் இயக்கங்கள் தோற்றுவித்து, கட்டுப்பாட்டோடு எதிர்த்துப் போராடவேண்டும். அந்தப் போராட்டத்திற்கு உங்களில் எத்தனை பேர் தயார்!

எல்லோரும்:—நான் தயார்! நான் தயார்!! நான் தயார்!!!

திரை விழுகிறது.

காட்சி 6.

நாடக உறுப்பினர்கள்: (ஊருராகச் சென்று, தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள், பெண்கள்)

ஒருத்தி: (பொதுக்கூட்டத்தில் பேசுகிறாள்) தோழியர்களே! தாய்மார்களே!! நாட்டு மக்களே!!! இன்றைய ஆண்கள் அரசாங்கம் இருக்கிறவரை, நமக்கு நல்வாழ்வு பிறக்காது, நம் கலிவு நீங்காது. காதல் கை கூடாது; கண்ணியமான வாழ்க்கை நடத்த முடியாது. ஆண்கள் ஆட்சியிலே ஏற்பட்ட அலங்கோலங்களைக் கண்ட பிறகுதான்—அனுபவத்தினால் அறிந்த பிறகுதான், ஆணித்தரமாகக் கூறுகிறேன் ஆண்கள் ஆட்சியை விரும்புவது அடிமை முறிச்சீட்டில் கையெழுத்திடுவது போன்றது என்று.

பெண்கள் ஆட்சி ஏற்பட்டால்தான் மனமொத்த மணம், சொத்துரிமை, மணவிலக்கு, பேச்சுரிமை கருத்து, எழுத்து சுதந்திரம் கிடைக்க முடியும். எல்லோருக்கும், திறமைக்கேற்ற வேலை, தேவைக்கேற்ற சம்பளம் கிடைக்கும்படிச் செய்வோம் நடைமுறையில். வரப்போகும் பொதுத்தேர்தலில், உங்கள் உயிரினுமினிய, விலை மதிப்பற்ற வாக்குரிமை (vote)யைப் பெண்களுக்கே அளிக்கும்படி வேண்டுகிறேன். ஆண்கள் ஆட்சி மலர்ந்தால், மீண்டும் முன் போல், அநீதி தாண்டவமாடும், அக்ரமம் தலை தூக்கும். நம் போன்ற அபலைகள் ஆடுமாடுகளைவிடக் கேவலமாக நடத்தப்படுவார்கள். சொந்தப் புத்தியற்ற மந்தைக்கூட்டமல்ல நீங்கள். எதையும் சிந்தனை செய்து, உங்கள் சொந்த முடிவுக்கு வாருங்கள்' (பேச்சு முடிகிறது).

(பொதுத்தேர்தல் நடக்கிறது. முடிவில் பெண்களே, பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெண்களாட்சி ஏற்படுகிறது. "பெண்கள் நலஉரிமை மசோதா", பெண்கள் முன்னேற்றக் காங்கிரஸ் கட்சியில் ஏக மனதாக நிறைவேறி, சட்ட சபையிலே, திருமதி பிரேமா அவர்களால் பிரேரேபிக்கப்படுகிறது.)

பிரேமா: (பேசுகிறார்) கனம், அங்கத்தினர்களே! "பெண்கள் நலஉரிமை மசோதா" இன்றைய நிலைமையில் மிக முக்கியத்வம் வாய்ந்தது; இன்றியமையாதது. நாட்டுக்கு நலம் பயக்கும் நல்லதோர் சட்டம் இது. ஆரணங்குகள், ஆடவரின் இரையாகி, அல்லலுற்று அவதிப்பட்டு வரும் அநீதியைத் தொலைக்கும், இம்மசோதா. பெண்களுக்குச் சொத்துரிமை, மணவிலக்கு, இருதார மணம் தடை செய்வது, பால்ய விவாகத்தைத் தடை செய்வது—ஆகிய கருப்பொருளைத் தன்னகத்தே கொண்டது. கனம் மெம்பர்கள் இதை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன். (பேச்சு முடிகிறது)

எலிஸி: நான் இம்மசோதாவை வரவேற்கிறேன். இம்மசோதாவைக் "காலமறிந்து கொண்டுவந்த திருமதி பிரேமா அவர்களை நான் பாராட்டுகிறேன். (பேச்சு முடிகிறது.)

(ஒரு ஆண் மெம்பர் இம்மசோதாவை எதிர்த்துப் பேசுகிறார்.)

திரு. இராமநாதன்: (பேசுகிறார்) கனம் மெம்பர்களே!

இம்மசோதா, உதவாக்கரை மசோதா. நாட்டு நன்மைக்கு உகந்ததல்ல. இதைவிட எத்தனையோ விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்படவிருக்கின்றன. இம்மசோதாவினால், புராதனக் கோட்பாடு புதைக்கப்பட்டுவிடும், சனாதனம், சாய்ந்து சவக்குழிக்குச் சென்றுவிடும். இந்துமதம் இகழப்பட்டு, இழி நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டு, இறுதியில் மடிந்துவிடும், தர்மம் தலை தூக்க முடியாது, நசித்துவிடும்,

ஆகமத்திற்கு ஆழக்குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கிறது, இம்மசோதா. விவாக விடுதலை தந்துவிட்டால், பிறகு குடும்பம் என்ற கட்டுப்பாடே இருக்காது. விபரீத

மான விளைவு இருக்கும். விபசாரம் வேரூன்றிவிடும். அது மட்டுமல்ல, பெண்களே, இம்மசோதாவை விரும்பவில்லை.

பெண்களின் விடுதலை என்னும் புதுமை மோகத்தால், நாட்டின் நலிவுக்கு வழிகோல வேண்டாம். (பேச்சு முடிகிறது)

சபா நாயகர்: மசோதாவைப் பற்றிய விவாதம் நாளை மீண்டும் தொடரும்.

(சபை கலைகிறது)

(மறுநாள் சட்ட சபையிலே, பெ. ந. உ. மசோதாவை, மீண்டும் ஆரம்பித்து வைக்கிறார், சபா நாயகர்.)

திருமதி சுகுணா: கனம் மெம்பர்களே! எதிர்க்கட்சித் தலைவர் ஏளனமாகப் பேசினார், இம்மசோதாவைப்பற்றி. இந்துமதம், இகழப்பட்டு, இழி நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டு இறுதிச் சடங்கு செய்யப்பட்டு விடுமாம். அதற்காக வேணும், இம்மசோதாவைக் கொண்டுவரக் கூடாதாம். (பேச்சு தடைப்படுகிறது.)

(சபையில் "உர் உர் உர்" என்ற சத்தம் கேட்கிறது).

ஒரு மெம்பர்: (எழுந்திருந்து) சட்ட சபையில் தூங்கலாமா?

(உடனே, சபா நாயகர், மேலை நாட்டு சட்டப்புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து).

சபா நாயகர்: தூங்கலாம்; ஆனால் குறட்டைதான் விடக் கூடாது.

(அந்த மெம்பர் எழுப்பப்பட்டு, சபையின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்படிச் செய்யப்படுகிறார். மெம்பர் மேலும் தொடர்ந்து பேசுகிறார்.)

திருமதி சுகுணா:—(தொடர்ந்து பேசும் போது)

இந்து மதம் இகழப்படுமாம். இந்து மதம்! எத்தகையது இந்த இந்து மதம். சூதாட்டத்திலே பாஞ்சாலியைப் பந்தயப் பொருளாக வைத்து விளையாடச் சம்மதித்தது, இந்த இந்து மதம். தொழுநோய் பிடித்திருந்த கணவனை வேறொரு தோகை வீட்டுக்குத் தூக்கிச் செல்வதற்குத் துணை புரிந்தது, இந்த இந்து மதம்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக, மாலையிட்டு மணந்த மனைவியையே மாற்றானுக்கு விலை கூறி விற்கும் அளவுக்கு விதிவிலக்கு அளித்தது, இந்த இந்து மதம். பழமையின், பார்ப்பனியத்தின் பலிபீடம், இந்த இந்து மதம்.

மதத்தைக்காட்டியதனால் மருட்சியடைந்து, மதவாதிகளுக்கு மண்டியிடவேண்டாம். சனாதனிகளின் சந்தடியைச் சட்டை பண்ணாதீர்கள். வைதீகர்கள் வசைமாரி பொழிவார்கள். பழமை விரும்பிகள், அவர்களுக்குப் பராக்குக்கூறுவார்கள். அரசியல் விரோதிகள் "அபாயச் சங்கு" ஊதுவார்கள். சமூகக் கட்டுக் கோப்பு சரிந்துவிடும் என்று சரமாரியாகச் சாடுவார்கள். விழுந்து விடாதீர்கள், அவர்கள் விரித்த வலையிலே.

இம்மசோதாவைப் பெண்களே விரும்பவில்லையாம். பெரிய பித்தலாட்டம் இது அப்படியே, வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், இம்மசோதா பெண்ணினம் படும் பெருந்துயரைத் துடைக்குமா,

வரண்ட பாலைவனம் போன்ற அவர்கள் வாழ்க்கையை வற்றாத ஊற்றுக்களாகச் செய்வதற்கு, வகை செய்யுமா, அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துமா— என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"ஆம்" என்று உணர்வு பூர்வமாக அறிந்தால், மசோதாவை, சட்டமாக்க வேண்டியதுதான்.

(பேச்சு முடிகிறது)

[பிறகு ஓரிரு திருத்தங்களுக்குப் பிறகு, பெண்கள் நல உரிமை மசோதா, பொது அசெம்பிளியில் நிறைவேறி, மேல் சபைக்கு அனுப்பப்பட்டு, அங்கு ஏக மனதாக நிறைவேற்றப்பட்டு, கவர்னர் அங்கீகாரத்துடன் சட்டமாக்கப்படுகிறது]

குறிப்பு:—

இந்நாடகம், நெல்லை நகர மன்ற மகளிர் நடுநிலைப்பள்ளி மாணவிகளால், அப்பள்ளிக் கூடத்தின் ஆண்டுவிழா'வின்போது (23-2-1951 அன்று) நடிக்கப்பட்டது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மியாக் கும்பல்களின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து சம்பூர்ணமான நமஸ்காரம் புரிந்த இவருடைய ஆட்சி— அதை எண்ணியா?

அல்லது, "நாடகமா—நடிக்காதே!" "புத்தகமா — படிக்காதே" "எழுத்தோவியமா— தீட்டாதே" என்ற விதத்திலே நாடகங்கட்கும் கவிதைகட்கும் காவியங்கட்கும் எழுத்தோவியங்கட்கும் கருத்தற்ற தடைகளை விதித்து எழுத்துரிமைக்கு வேட்டு வைத்தார்களே இவர் தம் அருமை அமைச்சர்கள்— அதை எண்ணியா?

அல்லது, முற்போக்குவாதிகள் அத்தனை பேராலும் வெறுக்கப்படுகின்ற சர்வாதிகார சாசனம் ஒன்றைத் தீட்டிக்காட்டி, இதன் பெயர்தானய்யா இந்திய அரசியல் திட்டம் என்று பூரிப்புடன் கூறிற்றே இவருடைய கட்சி— அந்த அரும் பெருங் காரியத்தை அன்புடன் எண்ணியா?

எதை எண்ணிப் பெருமைப் படுகிறார் 'எழில்மிகு தலைவர்' பண்டித நேரு?

எதை எண்ணி?

தோழர் இராசு

தஞ்சைத் தளபதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் மகனும், 23 வயது நிரம்பிய இளங் காளையும், தி. மு. க. முன்னணி வீரரும், அஞ்சா நெஞ்சு படைத்த அறப்போர் மறவரும் ஆகிய தோழர் கே என். இராசு 26—9—51 அன்று திடீரென்று இயற்கை எய்தினார் என்னும் சேதி கேட்டு திடுக்கிட்டுவிட்டோம். இயக்கக் கொள்கைகளிலே ஆழ்ந்த பற்றும், அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலே அசையாத உறுதியும் படைத்தவர் தோழர் இராசு. அவருடைய மறைவு நமக்கு ஈடுசெய்ய முடியாத இழப்புகளில் ஒன்றாகும். தோழர் நீலமேகத்திற்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உரியனவாகுக.

சிறு கதை

'சத்தியம்'

[தெ. பா. சம்பந்தன்]

1

'பிசு, பிசு'வென்று தூறிக் கொண்டிருந்த மழை, 'ஆடி மாதம் அழுகிற தூற்றல்' என்று யாரோ, எபபொழுதோ அளித்த நற்சாட்சியை நினைவுறுத்துவது போல இருநதது. மணியும் ஆறு அடித்து விட்டது. விளக்கும் வைத்தாகி விட்டது. முன் வாசலில் 'அப்பா, அம்மா' விளையாட்டில் ஈடுபட்டு உலகத்தையே மறந்திருந்தார்கள் சரோஜாவும் சேகரனும். சரோஜா ஒரு சிறிய ஏணை கட்டி அதில் தன் 'மரப்பாச்சி பொம்மை'யை வைத்துத் தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள். சேகர் என்ன செய்து கொண்டிருந்தானே, சந்தடியே இல்லை! ரேஷன் அரிசியினின்று கற்களையும் உமியையும் நெல்லையும் பொறுக்கி எடுத்துவிட்டு அரிப்பதற்காக நான் அடுப்பங்கரையினுள் நுழைந்தேன். அப்போது ஓவென்று ஓலமிட்டுக் கொண்டு அறையினுள் நுழைந்தாள் சரோஜா. சேகர் கையில் பொம்மையோடு அவளைத் தொடர்ந்து வந்தான். சரோஜா அழுவதைப் பார்த்து நான் ஒருவேளை தேள் கொட்டியிருக்குமோ என்று எண்ணிப் பதறினேன். "நான் பாப்பாவைத் தூங்கப் பண்ணிக் கொண்டே இருந்தேன். என்னை கொலு விளையாட்டிற்குகூப்பிட்டான். நான் மாட்டேன் என்றேன் அதற்காக அடித்துவிட்டானம்மா" என்று சொல்லித் தன் அழுகுரலை முன்னைவிட சற்று அதிகமாக உயர்த்திக்கொண்டாள் சரோஜா.

"ஏண்டா நீ அவளை அடித்தாய்?" என்று நான் சேகரை அதட்டிக் கேட்டேன்.

"சத்தியமாகச் சொல்றேம்மா, நான் அடிக்கவேயில்லை. பொம்மையைத்தான் பிடுங்கின..........................
.........................." அவன் பேச்சில் பாதிதான் என் காதில் விழுந்தது. அதற்குள் என் மனம் சூறுவளியில் சிக்கிய புழுதியைப் போலச் சுழன்றது. நான் உள்ளம் என்ற ரயிலில் இறந்த கால நிகழ்ச்சி என்ற நிலையத்தை நோக்கிப் பயணப்பட்டேன்.

2

அப்போது எனக்கு வயது ஏழு அல்லது எட்டிருக்கும். இந்தக் காலத்துப் பிள்ளைகள் எவ்வளவோ புத்திசாலித் தனமாகப் பேசுகிறார்கள். ஆனல் அந்தக் காலத்தில் நான் எவ்வளவு 'மட்டி'யாக இருந்தேன்! அதை நினைத்தாலே எனக்கு இந்தக் காலத்துப் பிள்ளைகள்மேல் கொஞ்சம் பொருமையாகத்தானிருக்கிறது.

நேற்று பிள்ளையார் சதுர்த்தி. படையலுக்காகப் பலகாரங்கள் செய்தேன். அப்போது சரோஜா வந்தாள். "அம்மா எனக்கு" என்று ஆவலோடு கேட்டாள் என் முகவாய்க்கட்டையைப் பற்றிக் கொண்டு! நான் சொன்னேன், "இவை சாமிக்காகச் செய்யப்பட்ட பண்டங்கள். சாமி சாப்பிடுவதற்கு முன்னல் நாம் எச்சில் படுத்தக் கூடாது. சாமி கண்ணைக் குத்தும்" என்று! அவள் அச்சத்துடன் அப்பால் சென்றுவிட்டாள். நான் இந்த நிகழ்ச்சியை அப்பொழுதே மறந்துவிட்டேன். ஆனல் நான் கூறின சொற்களை அவள் நினைவில் வைத்துக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது. எனவேதான் பூசை முடிந்தபின் ஆவலுடன் ஓடி வந்து தலை வாழை இலையில் படைக்கப்பட்டிருந்த தின்பண்டங்களைக் கூர்ந்து நோக்கினுள். நான் அவளை என்ன பார்க்கின்றாய் என்று அதட்டினேன் "அம்மா, வைச்சது, வைச்சபடியே இருக்கிறதே. சாமி சாப்பிடவில்லையா? ஒருவேளை சாமிக்கு இந்தத் தின்பண்டங்களெல்லாம் பிடிக்கவில்லையோ என்னமோ! ஏம்மா அதற்கு இஷ்டமானதைச் செய்யக் கூடாது?" என்று என்னையே கேட்டாள். என்ன பதில் கூறுவதென்றே எனக்குப் புலப்படவில்லை. நான் சிலையானேன்.

சரோஜா வயதிருக்கும்போது என்னை என் பள்ளித்தோழி விஜயா அடிக்கடி அடித்து இம்சைப்படுத்துவாள். வாய்விட்டு அழுதால் வாயைப் பொத்தி "மூடு வாயை" என்று அதட்டுவாள். நான் பயந்து அழுகையை அடக்கிக் கொண்டு பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வேன். எத்தனையோ காலமாக இது நடந்து வந்தது. ஆனல் ஒரு முறையாவது இதைப்பற்றி நான் பெற்றோர்களிடமோ அல்லது உபாத்தியாயரிடமோ முறையிட்டது கிடையாது. நான் என்ன செய்வது, அந்த எண்ணமே எனக்கு அப்போது தோன்றவில்லையே!

ஒருமுறை விஜயா சொன்னுள் "கண்ணில் சுக்கை இழைத்துப் போட்டுக்கொண்டால் கண் நன்றாகத் தெரியும். வானத்தில் உலவும் தேவர்கள் கூட நம் கண்ணுக்குப் புலனுவார்கள்" என்று. நான் அதை முழுக்க முழுக்க நம்பினேன். ஒரு நாள் இரவு யாருக்கும் தெரியாமல் சுக்கை இழைத்துக்கண்ணில் போட்டுக்கொண்டு நான் பட்ட 'அவஸ்தை' இவ்வளவு அவ்வளவு அல்ல. அடுத்த நாள் அம்மா கேட்டார்கள் ஏன் கண் சிவந்திருக்கிறதென்று. நான் ஏதோ ஒரு 'நொண்டிச் சாக்கு'ச் சொன்னேன். இப்போது அதை நினைத்துக் கொண்டால் எனக்கு அழுவதா சிரிப்பதா என்பதே புரியவில்லை.

என்னுடைய எட்டாவது வயதில் ஊரில் உலா வந்த வைசூரி என் தாயை என்னிடமிருந்து பிரித்துவிட்டது. "உன் அம்மா மோசம் செய்து விட்டாளடி, கண்ணே" என்று என்னைக் கட்டிக்கொண்டு உறவினர் ஒப்பாரி வைத்தபோது நான் அப்படி ஒன்றும் அதிர்ச்சி அடைந்து விட வில்லை. தாய்; அது எவ்வளவு உன்னதமான ஸ்தானம்! ஒரு நாட்டிற்கு ஒரு அரசன் போனல் வேறு அரசன் வருவான்; ஒரு மந்திரி போனல் வேறு மந்திரி வருவான். ஆனல் தாய் போனல் அந்தஸ்தானத்தில் வேறு யார் அமர முடியும்?

அப்பா ஒரு பெரிய தெய்வபக்தர். எங்கள் ஊர் 'ஆஸ்திக சிகாமணிகள் சபை'யின் தலைவருங்கூட. பட்டையாக நாமம் போட்டுக்கொண்டு 'கும

கம்' வென்று சத்தம் பூசிக்கொண்டு ராமாயணம் அல்லது மகாபாரதம் படிக்க உட்கார்ந்து விட்டால் அது 'கண்கொள்ளாக் காட்சி'யாக இருக்கும். அவருடைய உச்சரிப்பில் காந்த சக்தி கலந்திருந்தது போலிருக்கிறது, இல்லாவிட்டால் 'கதை' கேட்க வருபவர்கள் மகுடி கேட்ட பாம்பு போல மயங்கிடக் காரணம் என்ன? இரவு 10 மணி அல்லது 11 மணிக்கு அப்பா பாரதம் படிக்க உட்கார்ந்து விடுவார். படிப்பவர் தான் மட்டும் படித்தால் சுவைக் காதாம். எனவே 'உம்' என்று அப்போதைக் கப்போது கூற ஒரு ரசிகனையும் பக்கத்தில் அமர்த்திக் கொள்வார். அந்த ரசிகன் வேறு யாருமல்ல; நான் தான். அப்பா நான் ரசிக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு படித்துக் கொண்டே போவார். அவருடைய இனிமையான சாரீரம் என்னை அவர் கூறும் 'வியாக்கியான'ங்களைக் கேட்கவைப்பதற்கு மாறாகத் தூங்கப் பண்ணும். நான் தூங்கிவழிவேன், சில சமயங்களில் அவர் மேலே சாய்ந்து விழுவேன்!

அம்மா இறந்தபின் அப்பாவின் பூசைக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு என் தலையில் விழுந்தது. பூசை முடிந்ததும் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு அப்பா 'திண்ணைப் பேச்சு'க்குப் புறப்பட்டு விடுவார், நாகலிங்கம் அப்பாவின் நெருங்கிய நண்பர், தினமும் காலை மாலை இரு வேளையும் வந்து விடுவார். அப்பா அவருடன் பேச ஆரம்பித்துவிட்டால் அதற்கு முடிவே இருக்காது. பல சமயங்களில் பேச்சு சாப்பாட்டு வேளையோடு குறுக்கிடும். நான் சில சமயங்களில் குறுக்கிட்டு அவர்கள் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பேன். நாகலிங்கம் ஒரு பச்சை நாஸ்திகர். பரம ஆஸ்திகரான அப்பா அவருடன் எப்படிப் பொருந்தி இருந்தார் என்பது எனக்கு இன்னும் புதிராகத்தானிருக்கிறது.

நாகலிங்கம் எங்களுக்கு அறிமுகமானதே ஒரு சுவைமிக்க நிகழ்ச்சி. ஒருநாள் அவர் என் தாத்தாவின் பெயரைக்கூறி அவரைப் பார்க்க வேண்டும் என்றார். அப்பா அவர் காலமாகி விட்டதாகத் தெரிவித்தார். நாகலிங்கம் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டே தான் படித்துப் பட்டதாரியான விருத்தாந்தத்தைக் கூறினார். நாகலிங்கம் ஓர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவராம். அவருக்கு எங்கள் தாத்தாதான் உபகாரச் சம்பளம் கொடுத்துஊக்கப்படுத்தி B.A. வரை படிக்கச் செய்தாராம். இப்போது நல்ல நிலையை அடைந்துவிட்ட நாகலிங்கம் தாதாவைக் கண்டு தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அவரளித்த தொகையைத் திருப்பி அளித்து விடவே வந்தாராம்.

அவரளிக்க வந்ததொகை ரூபாய் நாலாயிரத்தை அப்பா வேண்டாமென்று எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. அது முதல் நாகலிங்கம் அப்பாவின் 'அத்யந்த' நண்பரானார்!

ஆனால் நாகலிங்கத்தைப் பார்க்கும்போதே நான் வெறுப்புணர்ச்சியை வளர்த்து வந்தேன். அவரது பேச்சில் பொதிந்து கிடந்த நாத்திகமே அவரைவெறுக்கும்படி என்னைத் தூண்டிற்று. அப்பாவை ஒருமுறை கண்டித்தேன். நாகலிங்கத்தின் தொடர்பு அவருக்குத் தகாது என்று எடுத்துக்கூறினேன் ஆனால் அப்பா "சுலோ, நீ உலகமே இன்னதென்று அறியாதவள். நீ இதில் தலையிடாதே" என்றார் கடுமையான குரலில்.

அப்பா நாகலிங்கத்தோடு எப்போதும் தர்க்கம் செய்வார். அப்போதெல்லாம் நான் அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்பது வழக்கம். அவர்கள் பேச்சிலிருந்து நாகலிங்கத்தின் கையே மேலோங்கி இருக்கிறதென்று அறிந்து நான் உள்ளூரவேதனைப்படுவேன். நாத்திகம் பரவினால் மக்களிடையே ஒழுக்கம் கெடுமே, ஊழல்கள் அதிகமாகுமே என்று அடிக்கடி என் மனம் சஞ்சலப்படும்.

திடீரென்று அப்பா காய்ச்சல் கண்டு படுத்த படுக்கையானார். 'ஸ்மரணை'யற்றுப்பிதற்ற ஆரம்பித்தார். அவர் நோய் அதிகமாக அதிகமாக என் வேதனை அதிகமாயிற்று. தாய் போனார் தந்தை இருக்கிறார் என்று சந்தோஷப்பட்டேன். ஆனால் இப்போது அந்த ஒரே பந்தமும் அற்றுப்போய் விட்டால் என் கதி..........?

நல்ல வேளையாக எனக்குத் தினமும் வந்து நாகலிங்கம் ஒத்தாசை செய்யலானார். அது எனக்கொரு பெரும் ஆறுதலாக இருந்தது.

ஆனால் அப்பாவின் நிலைமை கவலைக்கிடமானதாக ஆகிவிட்டது. டாக்டர் உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும் என்று கூறினார். நான் விழித்தேன். ஆனால் நிலைமையைப் புரிந்து கொண்ட நாகலிங்கம், "கவலைப்படாதீர்கள். நான் மலைபோல் இருக்கும்போது உங்களுக்குக் கஷ்டம் வந்தால் பார்த்துக் கொண்டிருப்பேனா? அவ்வளவு நன்றி கெட்டவனல்ல நான் இன்று இந்த நிலையில் நான் இருப்பதே நீங்கள் அளித்த பிச்சை தானே" என்று எதிர்பாராத விதமாகக் கூறினார். நான் அசந்து போனேன்!

பாசியை விலக்கின பின்புதான் குளத்தில் நல்ல நீர் இருப்பது தெரிகிறது. நான் ஒரு அவசரக்காரி. நாகலிங்கத்தைப் பூரணமாக உணராமல் அவரைப்பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்துவிட்டேன்.

அண்ணாவின் புதிய நூல்கள் :

நாடகத்தில் மறுமலர்ச்சி (ரேடியோப் பேச்சு)	0	1	6
விதைக்காது விளையும் கழனி	0	6	0

இரண்டு புத்தகங்களையும் புக்போஸ்ட்டில் பெற 0—7—6 அணு ஸ்டாம்புகள் அனுப்பவும்

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனும்.

கிடைக்குமிடம் :—

ஏம். நூரி

14-ஏ. குப்பையர் தெரு, சென்னை-1.

நாகலிங்கம் நாத்திகர்தான். ஆனால் மனிதப் பண்பே அற்றவர் அல்ல!

நாகலிங்கம், தானேமுன் நின்று எல்லாச் செலவையும் ஏற்றார், அவர் மட்டும் உதவியில்லாவிட்டால் நான் என் தந்தையை மீண்டும் உயிரோடு சந்தித்திருக்க முடியுமா?

அப்பா குணமாகிவந்ததும் நான் என் நன்றியறிதலை நாகலிங்கத்திற்கு நல்ல வரவேற்பு மூலம் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் அவர் வீட்டிற்கு வருவது அப்பாவிற்கு இப்போதெல்லாம் பிடிக்கவில்லை. அது அவருடைய கடுகடுத்த முகத்தின் மூலமே தெளிவாயிற்று. "அப்பா ஏன் நாகலிங்கத்தை வெறுக்கிறார்?" என்ற கேள்வி சதா என மன வானில் வட்டமிட்டது. காதில் ஒரு சிறு எறும்பு புகுந்து கொண்டுவிட்டால் போதும் தாங்கமுடியாத வேதனையை உண்டு பண்ண. அத்தகைய சக்தி ஒரு சிறு கேள்விக்குக்கூட உண்டு என்பதை நான் அப்போதுதான் உணர்ந்தேன்.

திடீரென்று நாகலிங்கம் வேற்றூருக்கு மாற்றப்பட்டார் என்ற செய்தி வந்தது. நான் திடுக்கிட்டேன். ஆனால் அப்பா மகிழ்ச்சி அடைந்தார். அதை அவருடைய மலர்ந்த தாமரை போன்ற முகமே காட்டிக் கொடுத்தது.

ஒருநாள் நாகலிங்கத்தினிடமிருந்து கடிதம் வந்தது. ஊருக்குப் போய் அவர் எழுதிய முதல்கடிதம் அது. அப்பா அதை வாங்கி வாசித்தார். அப்பாவின் காய்ச்சலுக்காகத் தான் செலவு செய்த ரூபாய் 2000-ஐ நாகலிங்கம் உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டிருந்தார். இப்போதுதான் புரிந்தது அப்பா ஏன் நாகலிங்கத்தை வெறுத்தார் என்பது. அப்பா அதற்கு என்ன பதில் எழுதினாரோ எனக்குத் தெரியாது. நான் அந்த விஷயத்தையே மறந்து போனேன்.

ஆனால் திடுமென நாகலிங்கம் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டார். முன்னறிவிப்பில்லாமல் அவர் வந்தது எனக்குத்திகைப்பை யூட்டிற்று. அவரை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தேன். ஆனால் எப்போதும் குறுநகை புரியும் அவர் முகத்தில் கோபக்குறிகள் காணப்பட்டன. அப்பாவிடம் அவர் வந்த செய்தியைக் கூறினேன்.

"ஓ நாகுவா. வாப்பா. என்ன விசேஷம்".

"விசேஷம் அல்ல மாசிலாமணி, விபரீதம். நீ எழுதிய கடிதம் கிடைத்தது. பட்ட கடனை நீ ஒரேயடியாகத் திருப்பிக் கொடுத்துவிட்டதாகக் கூறுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை, ஆஸ்திக சிகாமணிகள் சபையின் தலைவன் என்ற ஸ்தானம் வகித்துக்கொண்டு நீ செய்யும் நம்பிக்கைத் துரோகம் எனக்கு கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. நான் உனக்கு எந்தச் சமயத்தில் உதவியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொள். நான் உன்னை மரணப்படுக்கையிலிருந்து மீட்டவன். அதை மறந்துவிடாதே".

"மரணமாவது படுக்கையாவது. செப்புக்காசுகூடக் கிடையாது. போ வெளியே".

"அடபாவி... இந்தப் பகவத்கீதையின்மேல் ஆணையாகக் கூறு, எனக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக்கொடுத்துவிட்டதாக. நான் போய்விடுகிறேன்"

"இந்தக் கீதைமேல் ஆணையாக நான் உனக்குக் கொடுக்க வேண்டியது ஒன்றுமேயில்லை".

எதைத் தன் உயிருக்குயிராகப் போற்றி, வாழ்க்கை வழிகாட்டியாக மதித்து வந்தாரோ அதன்மேல் அப்பா ஆணையிட்டார். என் தலை சுழன்றது. நான் மயங்கி விழுந்தேன்.

மயக்கம் தெளிந்தெழுந்தபோது அப்பா அறையில் மேலும் கீழுமாக நடப்பதை உணர்ந்தேன்.

"அப்பா"

"என்னம்மா, சுலோ"

"ஒன்றுமில்லையப்பா, இன்று நீங்கள் நடந்து கொண்டது மனிதப் பண்புக்கே மாறுபட்டது'.

"சுலோ, நீ சிறு குழந்தை. உனக்கு ஒன்றும் தெரியாது. திருமங்கையாழ்வார் கூடத் திருட்டுத் தொழில் செய்தவர்தானம்மா". அப்பா ஆதாரம் காட்டிப்பேசினார். என் மனக்கண் முன்னால் நாகலிங்கம் தோன்றி புன்முறுவல் பூத்தார். அந்தப் புன்முறுவலுக்குப் பொருள் ....யாருக்குத் தெரியும்?

நாகலிங்கத்தைநாஸ்திகர் என்று எண்ணி வெறுத்து வந்தேன், என் அப்பாவை ஆஸ்திகர் என்று நினைத்துப் போற்றிவந்தேன். ஆனால் இப்போது எண்ணிப் பார்க்கிறேன் யார் உண்மையில் நாஸ்திகர், யார் உண்மையில் ஆஸ்திகர் என்று! இப்போது நான் திட்டவட்டமாகக் கூற முடியும் என அப்பா ஆஸ்திகர் அல்ல—ஆஸ்திகரே அல்ல! நாஸ்திகம் பேசுகிறார் என்றாலும் நாகலிங்கம் தான் உண்மை ஆஸ்திகம்—இதில் இப்போது எனக்குத் துளிக்கூட ஐயமே இல்லை!

3

"அம்மா, அம்மா"—என்னைப் பிடித்து உலுக்கினாள் சரோஜா, என் சிந்தனை கலைந்தது.

"ரெண்டுபேரும் போய்ச் சமாதானமாக அப்பா அம்மா விளையாட்டே விளையாடுங்கள். கோலு வேண்டாம். சண்டைபோடக் கூடாது. கண்ணல்ல".

இமைப்பொழுதில் சரோஜா சேகர் கரங்களைப் பற்றிக்கொண்டு பட்டுப் பூச்சி போலப் பறந்தாள். நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன்.

"யானைக்கால் வியாதிக்காரனுக்கு யானை பலம் இருப்பதில்லை, சுலோ" என்று யாரோ என் காதில் கூறுவது போன்றிருந்தது. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தேன். ஒருவரையும் காணோம். என் இதழ்களினின்று ஒருவரண்ட சிரிப்பு வெளி வந்தது.

குன்றத்தூரில்
தி. மு. க. ஆண்டு விழா

26—10—51 வெள்ளி மாலை 5-மணிக்கு குன்றத்தூர் பழைய சினிமா மைதானத்தில் (பஸ் ஸ்டாண்டு அருகில்) தோழர் T. M. கணபதி அவர்கள் தலைமையில்,

அறிஞர் C. N. அண்ணாதுரை M.A.

தோழர்கள்:—N. V. நடராசன் C. V. M. அண்ணாமலை P. பாலசுந்தரம் T. K. இப்ராகிம் T. D. தணிகாசலம் ஆகியோர் பேசுவர். மாநாட்டுக்கு நிதி, கூட்டத்தில் வழங்கப்படும்.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers
147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons)